பக்கங்கள்:-16

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 02 | சனிக்கிழமை | 19.10.2024 | அதிர்வு 78

## பிறந்து 45 நாட்களேயான குழந்தை திடீர் உயிரிழப்பு

**உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு**

யாழ்ப்பாணத்தில் பிறந்த 45 நாட்களேயான பெண் குழந்தை ஒன்று திடீரென உயிரிழந்துள்ளது.

கொடிகாமம், தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த துசியந்தன் தனுசியா என்ற குழந்தையே இவ்வாறு 06



# எல்லோரும் சமம் என்றால் அது மிகப் பெரிய ஆபத்து!

## ஜே.வி.பியின் கருத்துக்கு எதிராக விக்கி போர்க்கொடி

(எஸ்.நிதர்ஷன்)

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் எங்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு நிரந்தர தீர்வாக அமையாது. ஆனாலும், இப்போது இருக்கும் 13ஐயும் நாங்கள் பறிகொடுத்து விட்டு ஜே.வி.பியினர் கூறுவது போன்று எல்லோரும் சமம் என்று போனால் அது மிகப் பெரிய ஆபத்தாகும்."

- இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். 06

## கண்டியில் இருந்து யாழ். நோக்கி வந்த இ.போ.ச. பஸ்ஸின் சாரதி மீது தாக்குதல்

கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இ.போ.ச. பஸ்ஸை வவுனியாவில் வைத்து மறித்த இருவர், கொட்டன்கள், பொல்லுகளுடன் பஸ்ஸில் ஏறி சாரதி மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றனர்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.50 மணியளவில் இந்தக் கொடூர தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாக்குதலில் காயமடைந்த சாரதி, பஸ்ஸை பயணிகளுடன் வவுனியா பொலிஸ் நிலையம் கொண்டு சென்று முறையிட்டார். அதன் பின்னர் சாரதி, வவுனியா வைத்தியசாலை சென்று அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார்.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் தனியார் பஸ்ஸில் பணியாற்றுபவர்கள் 06






எது நடக்கக்கூடாது என்று பிரார்த்திக்கப்பட்டதோ, அதுவே நடக்கும் என்று ஆகிவிட்டது.

ஏற்கனவே நாட்டில் தீவிரமடைந்து வரும் சீன ஆதிக்கம் வடக்கிலும் – குறிப்பாக யாழ் பல்கலைக் கழகத்திலும் – கல்வியில் ஈடுபாடு என்ற வகையறாவில் தன் கைவரிசையைக் காட்டத் தீவிர முயற்சி எடுத்து வரும் சமயத்தில், தென்னிலங்கையில் அதிரடி ஆட்சி மாற்றம் நேர்ந்திருக்கிறது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்குள் ஊடுருவி, அதன் மூலம் நிலை எடுக்க முயன்ற சீனத் தரப்புக்கள், இங்குள்ள களநிலைமைகள், எதிர்ப்புணர்வுகள், ஆட்சேபனைகள் காரணமாக தாம் எதிர்பார்ப்பவற்றைச் சாதிக்க முடியாது தடுமாறி நின்றிருந்தன.

ஆனால் கொழும்பில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம் சீனத் தரப்புக்கு ஆதரவுப் போக்குடைய பிரமுகர்களை அதிகாரத்துக்கு கொண்டு வந்திருப்பதால், மீண்டும் வடக்கில் 06




# கொள்ளையர்கள், கொலையாளிகள் எங்கள் ஆட்சியில் தப்பவே முடியாது!

**தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க தெரிவிப்பு**

"தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் கள்வர்கள், கொலையாளிகள் தப்பவே முடியாது. உரிய வகையில் விசாரணைகள் நடத்தப்பட்டு, சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் பீதியடைந்துள்ள சிலரே, தற்போது கூச்சலிடுகின்றனர்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியவை வருமாறு:–

"தேசிய மக்கள் சக்தியினர் தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னதான் கூறினாலும், மக்கள் எம்மை அங்கீகரித்துள்ளனர். எம்மைப் பற்றி மக்களுக்கு எதுவித பிரச்சினையும் கிடையாது. நாட்டு மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

தற்போது இடைக்கால அரசே செயற்படுகின்றது. எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு பிறகு பலமானதொரு அரசை அமைப்பதற்குரிய ஆணையை நாட்டு மக்கள் வழங்குவார்கள். நாடாளுமன்றத்துக்குத் தகுதியான எதிர்க்கட்சியொன்றையும் அனுப்புமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

கள்வர்களைப் பிடிப்பது பற்றி கேட்கின்றனர், மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை ஆரம்பமாகியுள்ளது. ஊடகவியலாளர் லசந்த, விளையாட்டு வீரர் தாஜுதீன் உள்ளிட்டோர் தொடர்பான கொலை விசாரணைகள் இடம்பெறுகின்றன. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் சிலர் குழப்பம் அடைந்துள்ளனர். நாம் அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடமாட்டோம். நாட்டின் சட்டத்தின் பிரகாரம் அனைத்து நடவடிக்கைகளும் இடம்பெறும். எனவே, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்டோர் குழப்பமடைந்து, கள்வர்களைப் பிடிக்குமாறு முன்கூட்டியே கூக்குரல் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை." – என்றார்.

# தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியீடு





(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன் )

தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றது.

ஆனாலும், கட்சியின் செயலாளர் நாயகமான விக்கினேஸ்வரன் இந்தத் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கி இருக்கிற நிலையில் சட்டத்தரணி மணிவண்ணனை முதன்மை வேட்பாளராகக் கொண்டு கட்சியினர் போட்டியிடுகின்றனர்.

இதற்கமைய மணிவண்ணன் தலைமையில் போட்டியிடும் இந்தக் கட்சியின் வேட்பாளர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடி ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டனர். இதனைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் யாழ்ப்பாணத்திலுள்ள தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைக்கக் கட்சியின் முதன்மை வேட்பாளரும் முன்னாள் யாழ். மாநகர முதல்வருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் பெற்றுக் கொண்டார்.

இந்த வெளியீட்டு நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான ரஷ்யத் தூதுவருடன் பாதுகாப்புச் செயலாளர் சந்திப்பு



இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ். ஷாகர்யன் பாதுகாப்புச் செயலாளர் எயார் மார்ஷல் சம்பத் தோயகொண்டாவை சந்தித்துள்ளார்.

ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை பகுதியில் உள்ள பாதுகாப்பு அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# வடக்கு மாகாணத்தில் மழை நிலவக்கூடும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு



வடக்குமாகாணத்தில்மழையுடனானவானிலைநிலவக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும்.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் இரவு வேளையில் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவராக கபில செனவிரத்ன நியமனம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவராக சிரேஷ்ட பேராசிரியர் கபில செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இரசாயன விஞ்ஞானம் தொடர்பான பேராசிரியரான அவர், களனி பல்கலைக்கழகத்தின் பழைய மாணவராவார்.

1997ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வெய்ன் அரச பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெற்ற அவர், உணவுக்கு பயன்படுத்தக்கூடிய எண்ணெய் வகைகள், இரசாயனம் மற்றும் போசாக்கு தொடர்பான பல்வேறு ஆய்வுகளை வழிநடத்தியுள்ள பிரதான விரிவுரையாளராக காணப்படுகின்றார்.




# விசேட தேவையுடையோர் வாக்களிக்கும் போது உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல முடியும்

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் விசேட தேவையுடையோர் வாக்களிக்கும் போது வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்ல முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழு, உடனழைத்து செல்லும் உதவியாளர் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், அவர் வேட்பாளர் ஒருவரின் முகவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவராகவோ இருக்கக் கூடாது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, விசேட தேவையுடையோர் வாக்களிப்பதற்காக உதவியாளர் ஒருவரை அழைத்துச் செல்லும் போது உரிய தகுதிச் சான்றிதழை வாக்களிப்பு நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மாவட்டங்களுக்கு இடையில் பன்றிகளை கொண்டுசெல்ல தடை

மாவட்டங்களுக்கு இடையே பன்றிகளை கொண்டு செல்வது நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பன்றிகள் இடையே பரவும் வைரஸ் தொற்றினால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளர் ஹேமாலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்கள் உள்ளிட்ட மேலும் சில மாகாணங்களில் இந்த வைரஸ் பரவி வருதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# உத்தியோகபூர்வ இல்லங்களை ஒப்படைக்குமாறு முன்னாள் அமைச்சர்களுக்கு மீண்டும் நினைவூட்டல்



அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைக்குமாறு முன்னாள் அமைச்சர்களுக்கு மீண்டும் நினைவூட்டப்பட்டுள்ளதாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

28 அமைச்சர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் இதுவரை 14 உத்தியோகபூர்வ இல்லங்கள் மாத்திரமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மின்சாரம் மற்றும் நீர்க்கட்டண நிலுவைகள் அனைத்தையும் செலுத்தியதன் பின்னரே மேற்படி இல்லங்கள் மீள ஒப்படைக்கப்பட வேண்டும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், அனைத்து கட்டணங்களும் செலுத்தப்பட்டதன் பின்னரே உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப் பொறுப்பேற்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொது நிர்வாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அமைச்சின் அறிவிப்பை தொடர்ச்சியாக பொருட்படுத்தாமல் செயற்படும் முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சீன ஊடுருவல் அதிகரித்து, அதிகார ஈடுபாடும் கூடும் என அஞ்சப்பட்டது.

இதுவரை காலமும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் கூட்டமைத்துச் செயல்படுகின்ற பெயரில் இங்கு ஊடுருவதற்கு சீன தரப்புகள் எடுத்த முயற்சி, பக்கத்து நாட்டின் உஷார் படுத்தல் மற்றும் இயல்பாகவே இங்குள்ள சீன எதிர்ப்புணர்வு ஆகியவை காரணமாகப் பலனளிக்கவில்லை.

ஆனால் கொழும்பிலே ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துடன் இங்கு நிலைமை மாறிவிட்டது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புவியியல் பேராசிரியர் ஒருவர் தற்போது செமெட்ரிக்கல் விடுமுறையில் கனடா சென்றுள்ளார். அவர் தமது கலாநிதிப் பட்டப்படிப்பை சீனப் பல்கலைக்கழகத்தில் பெற்றவர். அதிகம் சீனச் சார்பு போக்குடையவர். அவர் யாழ் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள தமது மூன்று மாடி வீட்டை சீன தரப்புக்கு வாடகைக்கு விட்டிருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. அவரது வீட்டில் தற்போது ஐந்து, ஆறு சீன நாட்டவர்கள் – அதிகாரிகள் என்று கருதப்படுவோர் – வந்து தங்கி இருக்கின்றனர் என்று கேள்வி.

இது பற்றி அறிந்த அயல் தேசம் தன்னுடைய உளவறியும் ஏற்பாட்டை முடுக்கிவிட்டு இருப்பதாகத் தெரிகிறது.

மேற்படி சீன நாட்டவரின் யாழ் வருகையோடு, சீனப் பல்கலைக்கழகத்தோடு யாழ்ப் பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பில் உடன்பாடு செய்ய வேண்டும் என்ற அழுத்தம் யாழ்ப் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு கடுமையாக வந்திருப்பதாகத் தெரிகிறது.

மேற்படி யாழ். வந்துள்ள சீன அதிகாரிகள் குழு யாழ் பல்கலைக்கழகத்தின் பிரதான கட்டடத்துக்கு வெளியில், பல்கலைக்கழகத்தினுடைய சில கட்டமைப்புகளுக்கு நேரடியாக சென்று, ஓரிரு பீடாதிபதிகளுடன் பேச்சு நடத்தி இருப்பதாகவும், பக்கத்து நாடு திரட்டிய தகவல்களில் தெரிய வந்திருக்கிறது.

இந்த விடயத்தில் ஒரு சில பீடாதிபதிகளும் தொடர்புபட்டிருக்கின்றனர் என உள் வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பட்டப்பின் படிப்பு என்ற பெயரில் பட்டம் பெற்ற சீனர்களை யாழ்ப்பாணம் கொண்டு வந்து, யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்புக்கான வாய்ப்புகளை வழங்குவது உட்பட பல விடயங்களை முன்னெடுக்குமாறு யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு கடும் அழுத்தம் கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது.

சீனப் பல்கலைக்கழகத்துடன் யாழ்ப்பல்கலைக்கழகம் செய்ய வேண்டும் என்று சீனத் தரப்பினால் வலியுறுத்தப்படும் கூட்டுக் கல்வி நடவடிக்கைகளுக்கு யாழ். துணை வேந்தர் உட்பட அதிகாரிகள் தலையசைக்க வேண்டும் என்று மேற்படி செயற்பாட்டைத் தூண்டிவிடும் தரப்புக்கள் எதிர்பார்க்கின்றன.

சீன அதிகாரிகள் குழு இப்போது யாழ் வந்து நின்று தரும் அழுத்தத்தின்படி, யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் சம்பந்தப்பட்ட சீனப் பல்கலைக்கழகமும் கூட்டுக் கல்விச் செயற்பாட்டு உடன்படிக்கைக்கு இணங்குமானால், அந்த இணக்கத்தின் கீழ் முதல் கட்டமாக குறைந்தது 10அல்லது 12 சீனப் பட்டப்பின் படிப்பாளர்கள் யாழ் பல்கலையில் வந்து தங்கி நின்று தங்கள் பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளைத் தொடர்வார்கள் என்று கூறப்படுகின்றது.

பட்டப்பின் படிப்பு என்ற பெயரில் இங்கு வந்து யாழில் தங்கி இருக்கக்கூடிய சீன நாட்டவர்களின் பின்புலத்தை ஏனையோர் அறிந்து கொள்வது கஷ்டமானதாக இருக்கும்.

இப்படி முதல் பட்டங்களை பெற்றவர்கள் என்று பெயரில் இளம் வயதைத் தாண்டிய சீன நாட்டவர்களையும் இங்கு நிலை எடுக்க அனுமதிப்பது வீண் விவகாரங்களைத் தேடித்தரும் என்று எச்சரிக்கப்படுகின்றது.

ஏற்பட்டிருக்கும் ஆட்சி மாற்றத்தைப் பயன்படுத்தி வடக்கில் சீனா நில எடுப்பதற்கு யாழ் பல்கலைக்கழகம் தளமாகி விடக்கூடாது என்பதில் கற்றறிந்த தரப்புகள் உஷாராக இருப்பது நல்லது.

---

## எல்லோரும் சமம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ் மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன்போது நடத்திய ஊடக சந்திப்பின்போதே விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“13 ஆவது திருத்த சட்டத்துக்கு எதிராக அந்தக் காலத்திலே இருந்து ஜே.வி.பியினர் செயற்பட்டனர். ஆனால், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் அதற்கு மாற்றான கொள்கையுடன் அவர்கள் வாக்குக் கேட்டனர். இவ்வாறான நிலையில் இப்போது மீண்டும் தமது நிலைப்பாட்டையா ரில்வின் சில்வா ஊடாக வெளிப்படுத்த ஜே.வி.பியினர் முயல்கின்றனர்.?

ஆனாலும், அக்கட்சியின் பிமல் ரத்நாயக்க அப்படி அவர் கூறவில்லை என்றவாறாகக் கூறியிருக்கின்றார். இதனூடாக தமிழ் மக்களுக்கு எதிராக இவ்வாறான கருத்துக்களைக் கூறுவது அந்த மக்களின் மனங்களை நோகச் செய்யும் என்பது அவர்களுக்கே தெரிகின்றது போல் உள்ளது.

இந்த 13 ஆவது திருத்தச் சட்டம் எங்களுக்கு எந்தக் காலத்திலும் ஒரு நிரந்தர தீர்வாக அமையாது. ஆனாலும், இப்போது இருக்கும் 13 ஐயும் நாங்கள் பறிகொடுத்துவிட்டு ஜே.வி.பியினர் கூறுவது போன்று எல்லோரும் சமம் என்று போனால் அது மிகப் பெரிய ஆபத்தாகும்.

ஏனெனில் இந்த நாட்டில் பெரும்பான்மையாக இருப்பவர்கள் சிங்களவர்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையும் பாசையும் மதமும் எங்கள் எல்லோரையும் பீடிக்கக் கூடியதாகத்தான் அமையும்.

ஆகையினால் அவ்வாறான கருத்துக்களை நாங்கள் கண்டிக்கின்றோம். ரில்வின் சில்வா போன்றவர்கள் அவ்வாறு கூறுவது பிழை என்று தெளிவாகக் கூறுகின்றோம்.

இந்த 13 ஆவது திருத்தத்தை பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கால கட்டத்திலும் மாறி மாறி கூறி வருகின்றதைப் பார்க்கின்றோம். அவ்வாறு அவர்கள் எதனைக் கூறினாலும் 13 ஆவது திருத்தச் சட்டம் எந்தக் காலத்திலும் எங்களுக்கு ஒரு தீர்வாக அமையாது. அவ்வாறு அமையவும் போவதில்லை.

ஆனால், தமிழ் மக்களுக்கு எவ்வாறான தீர்வு தரப் போகின்றார்கள் என்று குறிப்பிடுகையில் பொருளாதாரப் பிரச்சினைதான் எங்களுக்கு இருக்கின்றது என்று ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா குறிப்பிடுகின்றார்.

அதுவும் பொருளாதாரப் பிரச்சினை என்று கூறும் போது எங்களுடைய தமிழ்ப் பிரதேசங்களில் காணிகள் அபகரிக்கப் படுகின்றன. பௌத்த சின்னங்கள் கொண்டுவரப்பட்டு புதிய புதிய விகாரைகள் அமைக்கப்படுகின்றன.

வடக்கையும் கிழக்கையும் ஒருமித்து வைத்திருக்கும் இடத்திலே சிங்களப் பிரதேசத்தைக் கொண்டு வந்து எங்களுடைய தொடர்ச்சியை அற்றுப் போகச் செய்கின்றார்கள்.

குறிப்பாக வடக்கு, கிழக்கிலே அதிக இராணுவத்தினர் குவிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அதனால் எங்களுக்கு ஏற்படும் பலவிதமான சமூகப் பிரச்சினைகளை நாங்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றோம்.

இவற்றையெல்லாம் பற்றிக் குறிப்பிடாது பொருளாதார அபிவிருத்தி என்று சில விடயங்களைச் செய்வதால் பிரச்சினை தீரும் என ரில்வின் சில்வா நினைத்தாரானால் அது அவருடைய அறியாமையை வெளிப்படுத்துகின்றது.

அவர் கூறுவது தெற்குக்குப் பொருந்தும். எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குப் பொருந்தாது.” – என்றார்.

---

## பிறந்து 45 நாட்களே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த 16 ஆம் திகதி குழந்தைக்கு உடல் சுகயீனம் ஏற்பட்டது. அதையடுத்து குழந்தையை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்குப் பெற்றோர் கொண்டு சென்றனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது.

அங்கு குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.

குழந்தையின் இறப்புக்கான காரணம் கண்டுபிடிக்கப்படாத நிலையில், உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

---

## கண்டியில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று தெரியவந்துள்ளது. அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.




# பொதுத் தேர்தல் தொடர்பில் 290 முறைப்பாடுகள் பதிவு

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய 290 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது,

தேர்தல் சட்ட விதிகளை மீறியமை தொடர்பிலேயே சகல முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவி-க்கப்படுகிறது.

அதேநேரம், இந்த முறைப்பாடுகளில் 211 முறைப் பாடுகளுக்குத் தீர்வு வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் 79 முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள் ளது.

# செலவை சமர்ப்பிக்கத் தவறினால் தேர்தல் உரிமையை இழக்க நேரிடும்

## பவ்ரல் அமைப்பின் அறிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைந்த பின்னர், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களது செலவு அறிக்கையை சமர்ப்பிக்கத் தவறினால் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குத் தேர்தல் உரிமையை இழக்க நேரிடும் என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த அதன் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலுக்கான தேர்தல் பிரசார ஆரம்பத்திலிருந்து அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் வாக்காளர்களுக்காக செலவிடக் கூடிய அதிகபட்ச நிதி தொடர்பிலான அறிக்கை வைத்திருக்க வேண்டியது அவசியம் எனவும் அவர் கூறியுள்ளார்.

PAFFREL



# மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கலாம்

அடுத்த மாதம் முதலாம் திகதிக்குப் பின்னர் மரக்கறிக-ளின் விலை அதிகரிக்கலாம் என ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தெரிவித் துள்ளது.

இந்தக் காலப்பகுதியில் அறுவடைக் காலம் இல்லாததால் மரக்கறிகளின் விலையில் அதிகரிப்பை எதிர்பார்க்கலாம் என அதன் ஆராய்ச்சி அதிகாரி துமிந்த பிரியதர்ஷன தெரி வித்தார்.

அத்துடன், தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரண மாக மரக்கறிகளின் விலைகளில் சிறிதளவு வித்தியாசம் காணப்பட்டாலும், இந்த நாள்களில் மரக்கறிகளின் விலையில் வீழ்ச்சி காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# தேயிலை ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு



வருடத்தின் முதல் 8 மாதங்களில் தேயிலை ஏற்றுமதி வருமானம் 8.3 வீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

வருடத்தின் முதல் 8 மாதங்களில் தேயிலை ஏற்றுமதியின் மூலம் 942.3 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது.



# அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் இரத்தப் பரிசோதகரை மாற்றுவதற்கு எதிர்ப்பு

(எஸ்.நிதர்ஷன்)

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் இரத்தப் பரிசோதகரை மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலையில் புதிதாக ஆய்வுக்கூடத்தில் இரத்தப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் குறித்த பரிசோதகரை தெல்லிப்பழைக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அந்த வெற்றிடத்துக்குப் புதிதாக ஒருவரை நியமிப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு மேலாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதனால் இரத்த மாதிரிகளை வேறு இடங்களுக்குகே கொண்டு செல்ல வேண்டும் அல்லது நோயாளர்கள் பணம் கொடுத்து வேறு இடங்களில் பரிசோதனை செய்ய வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறித்த வைத்தியசாலையில் டெங்கு பரிசோதனை, மலேரியா பரிசோதனை உள்ளிட்ட பல்வேறு பரிசோதனைகள் அதிகம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மாற்றப்படும் பரிசோதனைகளுக்கு மாற்றீடாக எவரும் நியமிக்கப்படவில்லை

எனவே, இதற்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், வைத்தியசாலையில் கடமையில் உள்ள வைத்தியர்களுக்கு எதிராக களவு, ஊழல், மோசடி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கடன் வாங்கிக் கடன் அடைத்தல்

ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் பழைய தினின்றும் வேறுபட்டதல்ல என்பதை வெளிப்படுத்துமாற் போல முன்னைய அரசு மற்றும் எதிர்த் தரப்பின் பிரமுகர்கள் குற்றச்சாட்டுகளை அடுக்கி வருகின்றனர்.

முன்னைய அரசுகள் கடனுக்கு மேல் கடனை வாங்கி நாட்டை நட்டாற்றில் விட்டு விட்டன என்பதுதான் பிரதான குற்றச்சாட்டு.

அந்தக் குற்றச்சாட்டின் மேல் கட்டி எழுப்பப்பட்ட அறகலய போராட்டத்தையும், அதேபோன்ற தொடர் குற்றச்சாட்டுகளின் அடுக்குகளையும் பயன்படுத்தித்தான் தற்போதைய தேசிய மக்கள் சக்தி ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றியது.

இப்போது அதே கடன் வாங்கும் போக்குப் பற்றிய குற்றச்சாட்டு புதிய அரசின் மீதும் விழுந்திருக்கின்றது.

புதிய அரசாங்கம் தன் பாட்டுக்கு கட்டு மட்டு இல்லாமல் தானும் கடன்களை வாங்கித் தள்ளுகின்றது என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டை அடுக்கியுள்ளது.

புதிய அரசு தான் ஆட்சிக்கு வந்ததும் ஒரு மணித்தியாலத்துக்கு 134 கோடி என்ற கணக்கில் கடன் வாங்கித் தள்ளுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹினி கவிரத்தின குற்றம் சாட்டி இருக்கின்றார்.

ஒக்டோபர் 2 ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கும இடையில் 13 நாள்களில் 40 ஆயிரத்து 190 கோடி ரூபா திறைசேரி பிணை முறிகளாகவும், திறைசேரி உண்டியல்களாகவும் அரசு கடன் பெற்றிருக்கின்றது என அவர் கூறுகிறார்.

இக்காலகட்டத்தில், கடந்த சில தினங்களில், ஒரு நாளைக்கு 3,223 கோடி ரூபா அல்லது ஒரு மணித்தியாலத்துக்கு 134 கோடி என்ற கணக்கில் அரசு கடன் வாங்கித் தள்ளியிருக்கிறது - திறைசேரி உண்டியல்கள் மூலம் என்று அவர் கூறுகின்றார்.

இப்படிக் கடன் வாங்கியிருப்பதை அரசாங்கம் மறுக்கவில்லை. கடந்த செப்டம்பர் 27ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கும்இடைப்பட்ட காலத்தில்46 ஆயிரத்து 510 கோடி ரூபா திறைசேரி பிணைமுறி மற்றும் திறைசேரி உண்டியல்கள் மூலம் கடனாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பதை மத்திய வங்கி ஒப்புக் கொண்டிருக்கின்றது.

ஆயினும், இது புதிய விடயம் அல்ல. அப்படி வாங்கிய 46 ஆயிரத்து 510 கோடி ரூபாயில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபா பழைய கடன்களை - திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி சிட்டைகள், பிணைமுறிகள் போன்றவற்றுக்கு செலுத்த வேண்டிய கடப்பாட்டை நிறைவு செய்வதற்காக - செலவிடப்பட்டிருக்கின்றது என்று ஜனாதிபதியின் பொருளாதார, நிதி ஆலோசகர் பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ கூறி இருக்கிறார்

பழையகடன்பொறுப்புக்களைநிறைவு செய்வதற்காக புதிய கடன்களை இப்படி பெற்றுக்கொள்வதுவழமையானஒழுங்கு என்றும், நாடாளுமன்றம் அனுமதித்து அங்கீகரித்த கடன் எல்லைக்குள் அது இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

அதாவது சுருக்கமாக சொல்வதானால், பழைய கடன் நிலுவைகளை நிறைவு செய்வதற்காக புதிய கடன்களை திறைசேரிப் பிணைமுறிகள், உண்டியல்கள் மூலம் பெற்றுக் கொள்ளும் முறைமைதான் தொடர்ந்து இருக்கின்றது என்பது அரசு தரப்பின் விளக்கம்.

இப்படி பிணைமுறிகள், திறைசேரி உண்டியல்கள், திறைசேரி சிட்டைகள் போன்றவை மூலம் வாங்கிய கடனைத் திரும்பவும் கடன் வாங்கி செலுத்தும் கையாலாகாத முறைமைதான் நாட்டின் அரசு நிர்வாகமாக இருந்து வருகின்றது.

அண்மையில்தான் அதிகாரத்துக்கு வந்த - ஆட்சிக்கட்டை கையில் - எடுத்த புதிய ஜனாதிபதியினாலும் அவரது சிறிய அமைச்சரவையினாலும் இத்தகைய கடன் நிலுவைகளை, ஆட்சிக்கு வந்த கையோடு அடைக்கின்ற மார்க்கம் இல்லை என்பது புரிந்து கொள்ளத் தக்கதே.

எனவே, வாங்கிய கடன்கள், கடப்பாடுகளை நிறைவு செய்வதற்குப் புதிய கடன்களை திறைசேரி உண்டியல்கள், பிணைமுறிகள் மூலம் தொடர்ந்து பெற்றுக் கொள்வதுதான் அரசுக்கு உள்ள ஒரே மார்க்கம். வழி.

ஆக, புதிய கடன்களை வாங்கி, பழைய கடன்கள், கடப்பாடுகளை நிறைவு செய்வதுதான் ஆட்சி நிர்வாகமாக நாட்டில் தொடர்கிறது, தொடரப் போகின்றது.



# தமிழர்கள் எண்ணங்களில் 50 ஆண்டுகளாக விஷம்

## தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கருத்து

தமிழக மக்களின் எண்ணங்களில் 50 ஆண்டுகளாக விஷம் ஏற்றப்பட்டுள்ளது என்று சென்னையில் நடந்த இந்தி மாத நிறைவு விழாவில் பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

திராவிடக் கட்சிகளின் ஆட்சி மற்றும் இந்தி திணிப்பு எதிர்ப்பு விவகாரத்தை முன்வைத்தே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார் என தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் பொன்விழா மற்றும் ‘இந்தி மாத’ நிறைவு விழா நிகழ்ச்சி நேற்று சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி மேலும் உரையாற்றுகையில்,

“ஆயிரக்கணக்கான பள்ளிகள் மொழி சிறுபான்மையினரால் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால், அவ்வாறான பள்ளிகள் அமைந்துள்ள மாநிலங்களில் அம்மாநில அரசுகள், தங்களது மொழிகளை கற்பிக்க அனுமதியளிப்பதில்லை எனக் கூறி அப்பள்ளிகளின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இறுதியில், மொழி சிறுபான்மையினர் நடத்தும் பள்ளிகளில் அவர்களுடைய மொழிகளை கற்பிப்பது, அவர்களுடைய அடிப்படை உரிமை என்று உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இந்த வழக்கில் தீர்ப்ளித்தது.

தமிழக மக்களின் எண்ணங்களில் 50 ஆண்டுகளாக விஷம் ஏற்றப்பட்டுள்ளது. இத்தகைய எண்ணங்கள், நாட்டின் பிற பகுதிகளில் இருந்து நமது மக்களை பிரித்துள்ளது. இந்த நிலத்தின் மிகவும் சக்திவாய்ந்த மொழி சமஸ்கிருதம். தமிழகத்தில் உள்ள அண்ணாமலை பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மாபெரும் வள்ளல் பெருமக்களால் உருவாக்கப்பட்டவை. அவர்கள் எவ்வாறு இதுபோன்ற பல்கலைக்கழகங்களை உருவாக்கினார்கள்? அவர்கள் சமஸ்கிருத பல்கலைக்கழகங்களைத் தொடங்கினர், தமிழ்ப் பல்கலைக்கழங்களையும் தொடங்கினர். அப்படித்தான், இந்த பல்கலைக்கழகங்கள் பெரிதும் வளர்ச்சிப் பெற்றன.

ஆனால், இன்று சமஸ்கிருதப் பாடம் முடக்கப்பட்டுள்ளது. அண்ணாமலை மற்றும் அழகப்பா பல்கலைக்கழங்களில் சமஸ்கிருதப் பாடம் இல்லை. ஒருகாலத்தில், சென்னைப் பல்கலைக்கழகத்தில் மிகத் தீவிரமான துறையாக சமஸ்கிருத துறை விளங்கியது. ஆனால், இன்று அது மரித்துபோய்விட்டது. இதுபோன்ற செயல்கள்தான், தமிழகத்தை நாட்டின் பிற மாநிலங்களில் இருந்து துண்டித்து, தனிமைப்படுத்தியிருக்கிறது. இது ஒரு பிரிவினைவாத கொள்கை. தமிழகத்தில் வேரூன்றிக் கிடக்கும் இந்த கொள்கைதான், தமிழகத்தை நாட்டின் பிற மாநிலங்களில் இருந்து தனிமைப்படுத்தியுள்ளது.

கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் இருந்து தமிழகத்தைப் பிரிக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தியா என்பது எப்போதும் ஒன்றுதான்.எனவே, அது ஒருபோதும் நடக்காது. இந்தியாவின் ஆன்மிக, கலாச்சார தலைநகரம் தமிழகம். சங்க காலம், பக்தி இயக்கம் தொடங்கி ஆழ்வார்களும், நான்மார்களும் மூலம்தான் நாட்டின் பல பகுதிகளுக்கு ஆன்மிகம், கலாச்சாரம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. புரட்சிகரமான தனது கவிதைகளால் மகாகவி பாரதியார், சுதந்திர போராட்டத்துக்கு வித்திட்டது இந்த மண்ணில் இருந்துதான். இதுதான் நமது பலமே தவிர, பிரிவினைவாத கருத்துகளோ, நச்சுத்தன்மைக் கொண்ட கருத்துகளோ அல்ல.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், நமது நாடு கடந்த பத்து ஆண்டுகளில் வேகமாக முன்னேறி வருகிறது. 1947 இல் நாம் சுதந்திரம் பெற்றபோது, இந்தியா உலகின் 6 ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக விளங்கியது. அதுவே, 2014 இல் அந்த நிலையில் இருந்து கீழிறிங்கி 11 ஆவது இடத்துக்குச் சென்றுவிட்டது. வறுமை ஒழிப்பு குறித்து நாம் பேசிக் கொண்டிருந்தாலும், நாம் பின்தங்கிய நிலையில் இருந்தோம். ஆனால், கடந்த 10 ஆண்டுகளில், உலகின் 5 ஆவது பொருளாதாராமாக வளர்ச்சிக் கண்டிருக்கிறோம்.

உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நாடாக இன்று இந்தியா இருந்து வருகிறது. இன்னும் ஒருசில ஆண்டுகளில், உலகில் வேகமாக வளர்ந்து வரும் மூன்றாவது பெரிய பொருளாதார நாடு என்ற இலக்கை எட்டும். பத்தாண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் குரலை யாரும் கண்டு கொள்ளவே இல்லை. ஆனால், இன்று உலகின் எந்தவொரு முடிவையும், இந்தியா இல்லாமல் எடுக்க முடியாது. இதுதான் இந்தியாவின் பலம். இவ்வாறாக இந்தியா வளர்ச்சி அடைந்து வருகிறது.

அதேநேரம், சில சக்திகள் இந்தியாவை பலவீனப்படுத்துகின்றன. அவர்கள் இந்தியாவை பின்னுக்கு இழுத்துவர விரும்புகின்றனர். இந்தியாவுக்குள் அவர்கள் வசித்துக் கொண்டே, இந்தியா குறித்து வெளியே தவறாக பேசுகின்றனர். மொழி மற்றும் இனத்தின் பெயரிலும், அரசியலமைப்புச் சட்டம் ஆபத்தில் இருப்பதாகவும் கூறி, அவர்கள் இந்தியாவில் ஒரு நிலையற்றத் தன்மையை உருவாக்க விரும்புகின்றனர்.

தமிழை வெளி உலகுக்கு கொண்டு சென்று பெருமை சேர்த்தது யார்? தமிழகத்துக்கு வெளியே எத்தனை கல்வி நிறுவனங்களில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகிறது? ஒருவரும் செய்யவில்லை. பிரதமர் மோடிதான் பாரதியார் இருக்கையை உருவாக்கினார். குவஹாத்தி பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிப் பாடம் கற்பிக்கப்படுகிறது. சிங்கப்பூர், மலேசியா, பாஸ்டன் பல்கலைக்கழங்களில் திருவள்ளுவர் இருக்கை உருவாக்கப்பட்டது. ஐ.நா.வுக்கு தமிழ் கொண்டுச் செல்லப்பட்டது.

தமிழ், தமிழ் என்று கூறி இங்கே சத்தமிட்டுக் கொண்டிருப்பவர்கள் யாரும் தமிழுக்காக எதையும் செய்யவில்லை. சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மையத்தின் புதிய கட்டடத்தை திறந்து வைத்தவர் பிரதமர் மோடி. ஆனால், இங்கிருக்கும் சிலர் வெறுமனே தமிழைப் பற்றி பேசிக் கொண்டும், அதை வைத்து அரசியல் செய்தும் வருகின்றனர். தமிழின் பெயரால் மக்களிடம் உணர்ச்சிகளைத் தூண்டுகின்றனர். இதுபோன்றவர்கள், நீண்ட நாட்களுக்கு வெற்றி பெற முடியாது. உலகின் பெருமையான மொழி தமிழ். அதற்காக ஒட்டுமொத்த நாடும் பெருமை கொள்கிறது. இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளும் கொண்டாடப்பட வேண்டிய மொழிகள்தான்.” – என்றார்.

# பிஹாரில் கள்ள சாராயம் குடித்த 25 பேர் பலி; நிதிஷ் குமார் அரசுக்கு பிரியங்கா கண்டனம்





பிஹாரில் கள்ளச் சாராயம் குடித்ததில் 25 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு பிரியங்கா காந்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

பிஹாரில் ஐக்கிய ஜனதா தளம் பாஜக கூட்டணி ஆட்சி நடக்கிறது. நிதிஷ் குமார் முதல்வராக உள்ளார். பிஹார் மாநிலத்தில் மதுவிலக்கு அமலில் உள்ளது. ஆனாலும், அடிக்கடி கள்ளச்சாராயம் குடித்துஉயிரிழக்கும் சம்பவங்கள் நிகழ்கிறது.

இந்நிலையில் சிவான் மாவட்டம், பகவான்பூர் காவல் எல்லைக்குட்பட்ட மதர் கிராமத்தை சேர்ந்த பலர் கடந்த செவ்வாய்க்கிழமை அப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட சாராயத்தை குடித்துள்ளனர்.

இதைத் தொடர்ந்து வீட்டுக்கு சென்ற அவர்களுக்கு தலை வலி, பார்வை இழப்பு, வாந்தி, வயிற்று வலி ஆகிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து அவர்கள் சிவானில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதுபோல் சரண் மாவட்டம் இப்ராஹிம்பூர் கிராமத்தில் கள்ளச் சாராயம் குடித்த பலர், உடல்நிலை பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இந்நிலையில் இவ்விரு சம்பவங்களிலும் உயிரிழந்தோர் எண்ணிக்கை நேற்று முன்தினம் 25 ஆக உயர்ந்தது.

பிஹார் கள்ளச் சாராய மரணம் தொடர்பாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"பிஹாரில் மதுவிலக்கு அமலில் இருந்தாலும், சட்டவிரோத மதுபான விற்பனை முழு வீச்சில் நடந்து வருகிறது. இதனால் தினமும் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. இதற்கு அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# பிரான்ஸில் மழையால் கடும் வெள்ளப்பெருக்கு

## 6 பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



பிரான்ஸில் கனமழையால் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அந்த நாட்டின் தெற்கு பகுதியில் மழை வெள்ள பாதிப்பு அதிகம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள 6 நகரங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸின் மூன்றாவது பெரிய நகரமான லியோன், திரைப்பட விழா நடைபெறும் கான் உள்ளிட்ட நகரங்களும் இந்தப் பட்டியலில் அடங்கும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் பத்திரமாக வெளியேற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு கருதி வீதிகள் மூடப்பட்டுள்ளன. மேலும், நீர் சூழ்ந்துள்ள இடங்களில் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை எடுப்பதன் மூலம் மக்கள் தங்களை ஆபத்துக்கு ஆளாக்கி கொள்ள வேண்டாம் என்றும் அதிகாரிகள் அறிவுறுத்தி உள்ளனர்.

வெள்ளத்தால் உயிரிழப்பு மற்றும் காயம் போன்ற அசம்பாவிதங்கள் எதுவும் பதிவாகவில்லை என தகவல் கிடைத்துள்ளது. இருப்பினும் வெள்ள பாதிப்பு குறித்த தகவல் முறைப்படி வெளியாகவில்லை.



# ஹமாஸ் தலைவர் கொல்லப்பட்டமைக்கு பதிலடி கொடுக்க தயாராகும் ஹிஸ்புல்லா

ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் கொல்லப்பட்டமை இஸ்ரேலுடனான மோதலை ஒரு புதிய அணுகுமுறைக்கு கொண்டுசெல்லும் என ஹிஸ்புல்லா அமைப்பு எச்சரித்துள்ளது.

இஸ்ரேல் மீதான தாக்குதல்களை தீவிரப்படுத்துவதாகவும், தலைவர் யாஹ்யா சின்வார் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கத் தாங்கள் தயாராக உள்ளதாகவும் ஹிஸ்புல்லா அமைப்பு கூறியுள்ளது.

ஹமாஸ் தலைவர் இறப்பதற்கு சற்று முன்பு இஸ்ரேலின் ஆளில்லா விமானம் அவருக்கு அருகில் பறந்து செல்லும் காணொலியை இஸ்ரேலிய பாதகாப்பு அமைச்சு வெளியிட்டு, அது தற்போது சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

ஹிஸ்புல்லா மற்றும் ஹமாஸை பகிரங்கமாக ஆதரிக்கும் ஈரானும் இந்தக் கொலையின் காரணமாக தனது எதிர்ப்பை அதிகரிக்கும் என அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வார் கொல்லப்பட்டார் என இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியது.

கட்டட இடிபாடு ஒன்றில் சின்வாரின் உடல் இருப்பதை இஸ்ரேலிய இராணுவத்தின் ஆளில்லா விமானம் ஒன்று கண்டுபிடித்ததாக அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்திருந்தார்.

கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலிலேயே சின்வார் கொல்லப்பட்டார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் சுமார் 1200 பேரைக் கொன்ற ஒக்டோபர் 7 தாக்குதலை திட்டமிட்டவரின் முக்கிய ஹமாஸ் தலைவராக சின்வார் கருதப்படுகின்றார்.

இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள் தெற்கு காசாவில் உள்ள ரஃபாவில் ஒரு இலக்கு தரை நடவடிக்கையில் ஹமாஸ் தலைவர் யஹ்யா சின்வாரை கொன்றதாக அறிவித்தது.

இஸ்ரேலிய தாக்குதல்கலால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஹமாஸ்'க்கு சின்வாரின் மரணம் மிகவும் பின்னடைவாக கருதப்படுகிறது.

இந்த மரணமானது ஹமாஸ் அமைப்பின் திட்டமிடல்களுக்கு பின்னடைவாக்க வழிவகுக்கும் என கருதப்படுகிறது.

சின்வாரின் வழிகாட்டுதலின் கீழ், ஹமாஸ் காசாவில் தனது இராணுவ அழுத்தத்தைத் தக்க வைத்துக் கொண்டதாக கருதப்படுகிறது.






**இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு,**

ஐயன்மீர்!,

உங்களுக்கு எனது வணக்கங்கள்.

உங்கள் எல்லோரிடமிருந்தும் தப்பி, உங்கள் கட்சி இன்னும் பலகாலம் உயிர் வாழ வேண்டுமென இறைவனைப் பிரார்த் திக்கிறேன்.

முறைப்படி இக் கடிதத்தை நான் உங்கள் கட்சித் தலைவருக்குத் தான் எழுதவேண்டும். ஆனால், இன்றைய நிலையில், தலைவர் இல்லாக் கட்சியாய் உங்கள் கட்சி மாறியிருக்கும் கொடுமையினை என்ன சொல்ல?

தலையில்லா உடம்பாகத் தத்தளிக்கிறது உங்கள் கட்சி. அதனாற் தான் உங்கள் அனைவரையும் பொதுவில் விளித்து இக் கடிதத்தை எழுதுகிறேன்.

அண்மையில் நீங்கள் தேர்ந்தெடுத்த புதிய தலைவரான ஸ்ரீதரன், அத் தேர்வு தவறென்று, தானே நீதிமன்றில் ஏற்றுக் கொண்டு செயல்பட முடியாமல் இருக்கிறார்.

பற்றியிருந்த பதவிக் கயிற்றினை விட விருப்பமில்லாமல், அதிற் தொங்கிக் கிடந்த முன்னாட் தலைவர் "மாவை" ஐயா அவர்கள், அத் தீர்ப்பினைக் கேட்டு மகிழ்ந்து, "அப்படியானால் நான் தான் இன்னும் தலைவரா?" என்று கொண்டாடிய கூத்தினைக் கண்டு உலகமே சிரித்தது. அவரது நடவடிக்கைகள், "ஆசை இருக்குது அரசாள, அம்சம் இருக்குது ஆடு மேய்க்க" என்ற பழமொழியைத்தான் பலருக்கும் நினைவூட்டின.

வரும் தேர்தலில் தனக்கும், தன் மகனுக்கும் "சீற்" இல்லை என்று தெரிந்ததும், விருப்பமில்லாமல் குழப்பம் ஏற்படுத்தி தற்போது தனது தலைவர் பதவியை, அவர் இராஜினாமாச் செய்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது.

தன் மகனை எப்படியும் "எம்.பி." ஆக்கி, தனது சிம்மாசனத்தில் அவரை இருத்த வேண்டும் என்ற ஆசைதான், பலர் பிடித்திழுக்கவும் அவர் அப் பதவியில் விடாது தொங்கிக் கொண்டிருந்ததற்கான காரணம் என்பது இப்போது தெரிய வந்திருக்கிறது.

மக்கள் ஆதரவு எனும் ஆயுதத்தை வைத்து மிரட்டிக் கொண்டிருந்த ஸ்ரீதரனை, புத்திசாலித்தனம் எனும் ஆயுதத்தால் தோற்கடித்துள்ளார் சுமந்திரன். கட்சியின் மத்தியகுழுவைச் சுமந்திரன் தன்வயப்படுத்தி, தனக்கு விருப்பமானவர்களுக்கு மட்டும் தேர்தல் "சீற்" வழங்கியிருக்கிறார் என்று பரவலாகப் பேசப்படுகிறது.

அரசியல் சார்ந்த அச் செயலை, முழுமையும் பிழையானது என்று நான் சொல்ல மாட்டேன். வலியவர், மெலியவரை விழுங்குவது நிர்வாகத் துறையில் வழக்கமாக நடக்கும் ஒன்றுதான். ஆனால், சுமந்திரனது அந்தப் புத்திசாலித்தனத்தை, தேர்தலுக்கான "சீற்"றுகள் வழங்கிய முறையில் காணமுடியவில்லை என்பதுதான் வருத்தமளிக்கிறது.

ஓரளவு சமூகத்தால் அறியப்பட்டிருந்த சசிகலா ரவிராஜ், தவராஜா ஆகியோருக்கு இம்முறை "சீற்" வழங்கப்படவில்லை. அதனால் மனம் நொந்த அவர்கள் "சீற்" கிடைக்காத கவலையில் கட்சியைவிட்டு விலகியிருக்கின்றனர். பதவி கிடைக்காவிட்டால், கட்சி மாறுவது என்ற அவர்களது பாதையும் சரியானதாய்ப் படவில்லை.

அதே நேரத்தில், மேற் சொன்னவர்களின் கோபம் தவறு என்றும் சொல்வதற்கில்லை. அவர்களைவிடத் தகுதி குறைந்தவர்களுக்கு வாய்ப்பளித்துள்ளமையே அவர்களின் கோபத்திற்கு காரணமாகிறது.

நடந்து முடிந்த வேறுவேறு தேர்தல்கள் பலவற்றில், தமிழரசுக் கட்சியால் அடுத்தடுத்து வாய்ப்பளிக்கப்பட்ட இம்மானுவேல் ஆர்னோல்ட் அவர்களுக்கு இம் முறையும் கட்சி "சீற்" வழங்கியிருக்கிறது.

"யாழ். மாநகரசபை மேயராய்"ப் பதவியேற்று நம்பிக் கையில்லாத் தீர்மானத்தால் பதவி இறக்கப்பட்டவர் அவர். சென்ற தேர்தலில் "சீற்" கிடைத்தும் தோற்றுப் போனவர் அவர். கடந்த தேர்தலில் சுமந்திரனால் பதவி பெற்று, பின்னர் "ஐ.பி.சி" இன் ஆதரவு பெறப்பட்டதாய்ப் பேசப்பட்ட நிலையில், அவரையே கடுமையாய் விமர்சித்து நின்றவர் இவர்.

இப்படியாய், வினைத்திறன் இல்லாத, மக்கள் ஆதரவு பெறாத, நேர்மைக் குறைவுள்ள ஒருவருக்குக் கட்சி ஆறாவது தடவையாகவும் வாய்ப்பளித்திருப்பதன் காரணம் எவருக்கும் புரியவில்லை. இப்படித் தகாதோருக்கு வாய்ப்பளித்தால் தக்கவர்கள் கோபிக்கத்தான் செய்வார்கள்.

இதுவரை சமூகத்தால் இனம் காணப்படாத ஒருவருக்கு, அவர் தந்தை செல்வாவின் பேரன் என்ற காரணத்தினால் மட்டும் "சீற்" கொடுத்திருக்கிறார்கள். பரம்பரை நோக்கிப் பதவி கொடுக்க, நடப்பது ஒன்றும் அரச ஆட்சி இல்லை என்பதைத் தேர்வுக்குழு ஏன் மறந்ததென்று தெரியவில்லை. இங்ஙனம் ஒருவருக்குக் கொடுத்தால் பாராளுமன்றம் சென்ற அத்தனை பேரும் தம் பரம்பரைக்கே அப் பதவியை வழங்க விரும்புவார்கள். அமரர் ரவிராஜின் மனைவியின் கோரிக்கையும் அதுவாகத்தான் இருக்கிறது. தேவையில்லாத முன்னுதாரணத்தைத் தேர்வுக்குழு பதிவு செய்திருப்பது வேதனைக்குரிய விடயமே.

ஓரிருவரைத் தவிர, புதிதாக வாய்ப்பளிக்கப்பட்டிருக்கும் பலபேரும் இதுவரை சமூகத்தால் இனம் காணப்படாதவர்கள் என்பது பெருங்குறை. இப்போதும், தனது ஆதரவாளர்களான, சமூகத்தால் இனங் காணப்படாத இரு பெண்மணிகள் உள்ளிட்ட ஒரு சிலருக்குச் சுமந்திரன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திச் "சீற" கிடைக்கச் செய்திருப்பதாய்ச் சொல்லப்படுகிறது.

முன்பும் ஒரு முறை, ஒரு பெண்ணுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமெனச் சொல்லி, சுமந்திரனால் வாய்ப்பளிக்கப்பட்ட சாந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள், பாராளுமன்றப் பதவி பெற்று எந்தச் சாதனையும் செய்யாமல் ஓய்வு பெற்றது தெரிந்த கதைதான். அதே தவறைச் சுமந்திரன், திரும்பத் திரும்பச் செய்கிறாரோ? என எண்ண வேண்டியிருக்கிறது.

சுமந்திரனால் புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களும், இம்முறை தம் பணிகளில் தோல்வியுற்றால், அத் தோல்விக்கான பொறுப்பினைச் சுமந்திரனே ஏற்க வேண்டியிருக்கும் என்பது நிச்சயம்!

அரசியலுக்குப் புதியவர்கள் வரவேண்டும் என்ற கருத்து சரியானதுதான். ஆனால் அப் புதியவர்கள் மக்கள் தொண்டின் மூலம் ஏற்கனவே சமூகத்தினால் இனங்காணப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமான ஒன்று. இவர்கள் பதவி பெற்ற பின்புதான் தொண்டு இயற்றுவார்கள் என்பது பொருத்தமற்ற வாதமாய்த்தான் இருக்கும்.

ஒன்று, மக்கள் தொண்டு செய்பவர்களை அரசியலுக்குள் கொண்டுவர வேண்டும். அல்லது தாம் அரசியலுக்குள் கொண்டு வர நினைப்பவர்களை மக்கள் தொண்டு இயற்றச் செய்வித்து சமூக அறிமுகத்தை ஏற்படுத்திய பின்னர், பதவி கொடுக்க வேண்டும்.

சுமந்திரன் இவ்விரண்டையும் செய்கிறார் இல்லை என்பது, நடுநிலையாளர்களால் அவர்மேல் வைக்கப்படும் குற்றச்சாட்டு.

மற்றொன்று, சுமந்திரன் கட்சியைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தாலும், துணிந்து சில முடிவுகளை எடுக்கும் திறன் அவரிடம் இல்லாதிருப்பது பெரிய குறையேயாம்.

கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாய்ச் சொல்லி, பலருக்கும் "சீற்" வழங்க மறுத்த சுமந்திரனது கையோங்கிய கட்சியின்

தொடர்ச்சி▼

**'சுடுசரம்'...**

(13ஆம் பக்கத் தொடர்ச்சி..)

தேர்வுக்குழு, அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சிக் கட்டுப்பாட்டை முற்றுமுழுதாய் மீறி நின்ற, ஸ்ரீதரனுக்கு மட்டும் "சீற்" வழங்கிய மர்மம் எவருக்கும் புரியாமற் தான் இருக்கிறது.

உங்களது கட்சி, ஆளுக்கொரு நீதி செய்தால் உங்களை நம்பி மக்கள் எப்படித்தான் பின்வரப் போகிறார்களோ? தெரியவில்லை.

தம் இருவருக்கிடையிலான போட்டியில், கட்சியை முழுந் தளவு நலியச் செய்திருக்கின்ற சுமந்திரனும், ஸ்ரீதரனும் தமக்குள் இருக்கும் பகை மாறாமலேயே, தேர்தல் சீற்று களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். தேர்வு செய்யப்பட்ட பின்பும் ஸ்ரீதரன் பேசி வரும் பேச்சுக்கள் அதை உறுதி செய்கின்றன.

இவர்கள், "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்று நினைத் துச் சேர்ந்தார்களா? அல்லது "ஒன்றுபட்டேனும் ஒருவரை யொருவர் அறுப்போம்" என நினைத்துச் சேர்ந்தார்களா? என்பது காலப்போக்கில்த்தான் உறுதியாகத் தெரியப் போகிறது.

"அரசியலில் நிரந்தரமான பகைவரும் இல்லை, நிரந்தர மான நண்பரும் இல்லை" எனும் உண்மையை, இவர்கள் என்றுதான் உணரப் போகிறார்களோ? தெரியவில்லை.

ஒன்று, பகைவர்களாய் நினைந்து விலகி விடவேண்டும், இல்லையேல் நண்பர்களாய் நினைந்து ஒன்றுபடவேண்டும். இவர்கள் அவ்விரண்டையும் செய்வதாய்த் தெரியவில்லை. கட்சிக்குச் சமாதிகட்டி முடிந்த பிறகுதான், இவர்கள் ஒன்று படுவார்கள் போலத் தெரிகிறது.

அண்மையில் கட்சியிலிருந்து விலகிய தவராஜா, தேர்த லுக்கான தேர்வுக்குழுவில் இருந்துகொண்டு தமக்கான "சீற்"று களைச் சிலர் ஒதுக்கிக் கொள்வது, சட்டவிரோதம் என அறிக்கை விட்டிருக்கிறார். சுமந்திரனும், ஸ்ரீதரனும் அவர் சொன்ன குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கின்றனர். சட்டத் தரணியான அவர், சட்டம் பற்றிச் சொல்வது உண்மையாய் இருக்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால் ஒன்று, தமிழர் விடுதலைக் கூட்டணிக் காலம் தொட்டு இந்தக் கோளாறு அங்கு நடந்து கொண்டுதான் இருக்கிறது.

அப்போது, சம காலத்தில் கட்சிக்குள் பிரவேசித்தவர்களாக அமிர்தலிங்கமும், இராஜதுரையும் இருந்தார்கள். அவ்விருவ ரில், அமிர்தலிங்கம் ஒருமுறை வட்டுக்கோட்டை தொகுதியில் நின்று தோல்வியுற்றார். ஆனால், இராஜதுரை தான் கேட்ட தேர்தல்களில் ஒருமுறையேனும் தோல்வியுறவில்லை.

அப்படியிருக்க, த.வி.கூட்டணி எதிர் கொண்ட தேர்தலில், தேர்தல் நியமனக் குழுவில், அமிர்தலிங்கம் தான் இருந்து கொண்டு, இராஜதுரையைத் தேர்வுக்காக அழைத்ததும், அத் தேர்தலில் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு எதிராக இராஜதுரையை எதிர்த்து, காசியானந்தனைத் தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட வைத்ததும் அனைவரும் அறிந்த விடயமே.

அத் தேர்தலில் காசியானந்தன் தோற்று இராஜதுரை வென்றதும், கட்சிக்குள் தனக்கு நிகழ்ந்த அவமரியாதையை நினைந்து வருந்திய இராஜதுரை, அரசுடன் இணைந்தார், அவருக்கு நேர்ந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்காத தமிழி னம், அவர் அரசுடன் இணைந்ததால், அவரைத் துரோகி என்று அழைத்து இழிவு செய்தது.

தவராஜாவிற்கு இவைபற்றியெல்லாம் தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. தகுதி குறைந்தவர்கள் தேர்வுக் குழுவில் இருந்து கொண்டு, தகுதியானவர்களைத் தேர்வுக்கு வரச்சொன்ன அநியாய வரலாற்றை அவரும் நிச்சயம் அறிந்துதான் இருப்பார். தனக்கு அநீதி நேர்ந்ததும் தான், அச் செயலின் கொடுமை அவருக்குப் புரிகிறது. என் னவோ? ஏதோ? தவராஜா கேட்டதில் மட்டும் தவறில்லை என்றே தோன்றுகிறது.

ஒரு பதவிக்கான "இன்ரவியூ"வை நடத்தும் ஒருவர், தனக்கென்று ஒரு பதவியை எடுத்துக் கொள்வது எப்படி நியாயமாகும்?

உலகநீதி பேணுவதற்காகவேனும், தாம் தேர்வுக்குழுவில் இருப்பதைத் தவிர்த்து, தம் ஆதரவுத் "தலையாட்டிகள்" சில பேரைத் தேர்வுக் குழுவாக்கி, தமது நோக்கத்தை அவர்கள் மூலம் நிறைவேற்றியிருக்கலாம். பொய்மையாக இருந்தா லும், நீதி பேணிய தன்மையாவது அதில் காப்பாற்றப் பட்டிருக்கும்.

அதுவன்றித் தமக்கான "சீற்"றுகளைத் தாமே தேர்ந்தெ டுத்துக் கொள்பவர்கள், மற்றவர்களுக்கான தேர்வினை நடத்துவது, மாபெரிய ஜனநாயகத் தவறுதான் என்பதை நானும் ஏற்றுக் கொள்கிறேன்.

"தடி எடுத்தவன் எல்லாம் தண்டற்காரன்" எனுமாற் போல, உங்கள் கட்சியில் ஆதரவுக்கரம் ஓங்கியவர்கள் எதை நினைத்தாலும் செய்ய முடிகிறது. வெட்கக்கேடு!.

எது எப்படியோ? ஓர் முக்கியமான தேர்தலுக்கு, முக்கி யமான சூழ்நிலையில் உங்கள் கட்சி முகம் கொடுக்கப் போவதை நீங்கள் அனைவரும் உணர்ந்திருக்கிறீர்களா? என்பது கூடத் தெரியவில்லை.

உங்கள் அணியை ஓரளவு சரிசமமாய் எதிர் கொண்டு நின்ற "சைக்கிள்"க் கட்சி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களின் உடல்நலப் பாதிப்பால் இன்று சற்று வலுவிழந்து போயிருக்கிறது. அவருக்குப் பின் அவரளவான வலிமை யுள்ளவர் எவரும் அக் கட்சியில் இல்லை என்பது பெரும் குறைபாடு.

ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்பவை தெற்கிலேயே நலிவடைந்து விட்டன. அவர்களால், வரும் தேர்தலில் வடக்கில் நின்றுபிடிக்க முடியப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

"டக்ளஸ்" வழக்கம் போல தனக்கான பகுதிகளை வென்றெடுப்பார். மற்றும்படிக்கு ஒட்டு மொத்தமாய் அவர் உங்களைப் பாதிக்கப் போவதில்லை.

சென்றமுறை போல, "வேலை வாங்கித் தருகிறேன், அது தருகிறேன், இது தருகிறேன்" என்றெல்லாம் புளுகுகளை அவிழ்த்துவிட்டு, இந்த முறை வெற்றி பெறவும் எவருக்கும் வாய்ப்பிருக்கப் போவதில்லை.

நலிவுற்ற "சங்கு"க் கட்சிக்காரர்கள், தமக்குத்தாமே சங்கு ஊதுவார்கள் போல்தான் தெரிகிறது. "பார் புகழ்" கொண்ட முன்னாள் முதலமைச்சரின் "மான்" அணியும், துள்ளிப் பாய்ந்து இனி மக்கள் மத்தியில் தலையெடுப்பது கொஞ்சம் கஷ்டம்தான் என்றே நினைக்கிறேன்.

இம்முறை அருச்சுனாவும் ஆளநினைத்து ஓர் அணியை இறக்கியிருக்கிறார். அது பற்றி நீங்கள் அதிகம் கவலைப் படத் தேவையில்லை. அவரது வாயே அவர் அணியை வலுவிழக்கச் செய்துவிடும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் அணியின் கோரிக் கையை ஏற்றுப் பெரும்பான்மையான தமிழ் மக்கள், "சஜித் துக்கு" வாக்களித்தமையைப் பார்க்கின்ற போது, இத்தனை கோளாறுகளுக்குப் பின்னும், மக்கள் இன்னும் உங்களின் தமிழரசுக் கட்சியைத்தான் நம்புகிறார்கள் போற் தெரிகி றது. அதனால், இம்முறை உங்களுக்கான வெற்றிப்பாதை தடையின்றித் திறந்திருப்பதாகவே தோன்றுகிறது.

ஆனால் ஒன்று! அப் பாதையை மற்றவர்கள் தடுக்க வாய்ப்பிருக்கிறதோ? இல்லையோ? உங்களுக்குள் இருக்கும் "உட்பகை" எனும் பெருந்தடை, உங்களைப் பெரியளவிற் பாதிக்கப்போவது மட்டும் நிச்சயம்.

"சீற்" கேட்டு விண்ணப்பித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் தற்போது உங்களுக்குச் சங்கு ஊதச் சென்றுவிட்டார்.

உறவினரான சம்பந்தனின் பெருங்கருணையினால், பதவி பெற்றிருந்த காலத்திலேயே கட்சி உறுப்பினர்களின் கால்களை வாரிக்கொண்டிருந்த அவர், இனிச் சும்மா இருக்கமாட்டார் என்பது வெளிப்படை. "உதயன், இனி உங்கள் தமிழரசுக் கட்சியைத் தாராளமாய் உதையும்" என நம்பிக்கையாய் எதிர்ப்பார்க்கலாம்.

இப்போதே உங்கள் ஆட்களிற் சிலர், வேறு வேறு அணி களாய்ப் பிரிந்துநின்று, தேர்தலைச் சந்திக்கப்போவதா கச் செய்திகள் வருகின்றன. உங்களுக்குள் இருக்கும் பெரும்பகையாளிகளான சுமந்திரனையும், ஸ்ரீதரனையும் உண்மையாய் ஒன்றுபடுத்தினால் அன்றி, இந்த அவ லத்தை யாராலும் தடுக்க முடியாதென்றே தோன்றுகிறது.

ஒன்றைமட்டும் நீங்கள் மறந்து போகாதீர்கள்! நம் தமிழ்க் கட்சிகளுக்குள் நீங்கள் முதன்மை பெற்றிருப்பது உண்மையாய் இருக்கலாம். ஆனால் அதற்காக மட்டும் நீங்கள் பெருமைப்பட முடியாது. இம்முறை நீங்கள் எதிர் பார்க்காத ஓர் பேராபத்து உங்களை நோக்கி வரப்போகிறது. அது என்ன என்று சொல்கிறேன்.

அண்மையில் தனது இனபேதமற்ற, நேர்மையான, தேசப்பற்றுள்ள நடவடிக்கைகளால் இலங்கை முழுவதுமாய் "விஸ்வரூபம்" எடுத்திருக்கின்ற ஜனாதிபதி "அநுர"வின் பாதிப்பு, தமிழ் மக்களையும் பெரியளவில் ஈர்த்திருக்கின்றது. அதனால், ஜனாதிபதி "அநுர" அணியினர், வடக்கில் நிறுத் தப் போகும் வேட்பாளர்களுக்கு, தமிழ் மக்களின் வாக்குகள் குவிந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அப்படி மட்டும் நடந்தால், உங்களின் கதி "அதோ" கதியாகத்தான் இருக்கும்.

அதனால், சுய கௌரவங்களை விட்டு, உங்களின் தலை வர்கள் இருவரும் வருமுன் காக்கத் தவறுவார்களேயானால், வருங்காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் தேசியக்கட்சிகள் நிலைகொள்வதை எவராலும் தடுக்க முடியாமல் போய் விடும் என்பது மட்டும் நிச்சயம். சிந்தியுங்கள்!.

ஏற்கனவே, "கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிருக்கிறது". மேலும் அதனைத் தேய்த்துக் காணாமற் போய் விடவும் செய்துவிடாதீர்கள். வீடுதான் உங்களுக்கான விமோசனம்! பழுதுகள் நீக்கி அதனைத் தொடர்ந்து பாதுகாக்க முய லுங்கள்!.

"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"

# இன்றைய ராசி பலன்கள் -19.10.2024




இன்று வெற்றி கிடைக்கும் நாள். வெற்றி பெறுவதற்கான உறுதி உங்களிடம் காணப்படும் நாள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் வீட்டில் விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி நிலவும். இதனால் நீங்கள் மிகவும் உற்சாகத்துடனும் , உறுதியுடனும் காணப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று செழிப்பாக உணர்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




உங்கள் செயல்களை சுமூகமாகவும் வெற்றிகரமாகவும் செய்வீர்கள். முக்கிய நடவடிக்கைகள் இன்று நற்பலங்களைத் தரும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டைப் பெறும். உங்கள் பணிகளை அனுசரணையோடு செய்வீர்கள்.

நகைச்சுவை உணர்வு காரணமாக உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். இது உறவை வலுப்படுத்த உதவும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். அதிகமாக சேமிக்கும் நிலை இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் நகைச்சுவை உணர்வால் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடுவீர்கள். அதன் மூலம் பதட்டத்திலிருந்து விடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் இருக்கும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். எனவே பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்ற வேண்டும்.

குடும்பப் பிரச்சினைகள் காரணமாக இன்று குழப்பமான மன நிலையில் இருப்பீர்கள். இது உங்கள் துணையை வருத்தமுறச் செய்யும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். கூடுதல் செலவுகள் காணப்படும்.

உங்கள் தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும். தந்தையை முறையாக கவனிக்க வேண்டும்.




உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நேர்மறை எண்ணத்துடனும் உற்சாகத்துடனும் இருப்பது சிறந்தது.

கூடுதல் பணிகள் காணப்பட்டாலும் பணியில் வளர்ச்சி காணப்படும். கவனமுடன் பணியாற்றுங்கள்.

இன்று உங்கள் துணையுடன் பழகும் போது உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையேயான நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வரவைவிட செலவு அதிகமாக இருக்கும்.

மன உளைச்சல் காரணமாக கால் வலியால் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சியடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் சிறந்த பலன்கள் காண்பீர்கள். வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வது உதவிகரமாக இருக்கும். பொறுப்பு மற்றும் உற்சாக மனப்பான்மை உங்களிடம் காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். உங்களுக்கு வரவேண்டிய நீண்ட கால நிலுவைத் தொகை வந்து சேரும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் உற்சாகமும் ஆர்வமும் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. நீங்கள் விரும்பியதை அடியஅடைய கடினமாக உழைக்க வேண்டும்.

சக பணியாளர்களுடன் மோதல் காணப்படும். பணிகளைக் கையாளும்போது பொறுமை அவசியம்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனம் தேவை. கோபம் கொள்வதால் உறவின் நல்லிணக்கம் கெடும்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. வீட்டில் பெரியவர்களின் உடல் நலத்திற்கு பணம் செலவு செய்ய நேரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. விரைவில் சோர்ந்து போவீர்கள். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருக்க பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுங்கள். இதனால் உங்கள் உற்சாகம் அதிகமாகும்.

பணிகள் சுமூகமாக நடக்க கவனமுடன் பணியாற்ற வேண்டும். தொழில் சார்ந்த அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

உங்கள் துணையுடனான சந்தேகம் மோதலை ஏற்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த சந்தேகப் போக்கை தவிர்ப்பது நல்லது.

இன்று போதிய பணம் காணப்படும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நிதி சம்பந்தமான முக்கிய முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செரிமானப் பிரச்சினைகள் மற்றும் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம்.




இன்று தொழில் சார்ந்த மற்றும் யதார்த்தமான அணுகுமுறை உங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டும். உங்கள் செயல்களை சிறந்த முறையில் ஆற்ற அமைதியான அணுகுமுறை தேவை.

இன்று ஓய்வெடுக்க முடியாதபடி பணிகள் அதிகமாக இருக்கும். பணியில் ஏற்படும் மாறுபாடுகளுடன் ஒத்துப் போக உங்கள் பணிகளை திட்டமிட்டு ஆற்ற வேண்டும்.

குடும்ப உறவினர்களிடம் நட்போடு நடந்து கொள்ள வேண்டும். இதனால் குடும்ப வட்டார உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை இருக்காது. வரவும் செலவும் சமமாக இருக்கும். இன்று எந்த முக்கிய முடிவும் எடுக்க வேண்டாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -19.10.2024




உங்களின் தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் உங்கள் வளர்ச்சியில் முன்னேற்றம் காணலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். அது உங்களுக்கு பய னுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். மகிழ்ச்சியான மன நிலையில் உங்கள் உணர் வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர் கள்.

இன்று அதிக பணவரவு காணப்படும்.ஆன் மீக விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர் கள்.

இன்று தேக நலன் சிறப்பாக இருக்கும். உங்களி டம் காணப்படும் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சிறப்பாக இருக்க உற்சாகமாக இருங்கள். தேவையற்ற எண்ணங்களை தவிர்த்திடுங்கள்.

நீங்கள் கவனமுடனும் விழிப்புடனும் பணியாற்ற வேண்டும். உற்சாகமின்மை மற்றும் சோம்பல் காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் ஏற்படும் கருத்து வேறுபாடு காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படலாம். நல்ல புரிந் துணர்வை ஏற்படுத்த அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

கவனமின்மை காரணமாக பண இழப்பு ஏற்படும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.இந்தச் சூழ்நிலையை நீங்கள் கையாள வேண்டும்.

உடற்பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது ஆரோக் கியத்திற்கு சிறந்தது. இருமல் பிரச்சினைகள் ஏற்பட லாம்.




உங்களின் தேவைக்கு பயன்படும் சரியான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும். இன்று துடிப்பான நாளாக இருக்கும். கவனமுடன் செயல்பட்டால் நன்மை விளையும்.

உங்கள் பணிகளை உறுதியுடனும் எளிதாகவும் ஆற்றுவீர்கள். உங்கள் முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் துணையுடன் விருந்துகளில் கலந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். மேலும் சமூக வட்டாரத்தில் கலந்து பழக முடியும்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்கும். மியூச்சுவல் பண்டில் நீங்கள் பணம் முதலீடு செய்யலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் இருக்கும் ஆற்றல் காணரமாக உங்கள் ஆரோக் கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் செயல்களில் கவனம் தேவை. எதிர்மறை எண்ணங்கள் உங்களுக்கு கவலையையும் குழப் பத்தையும் ஏற்படுத்தும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக் காது. பணியில் தவறுகள் நேரும். இது உங்களுக்கு கவலையை அளிக் கும். எனவே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் துணையுடனான நல்லிணக்கம் கெடும். உங்கள் துணை யுடன் தெளிவாக பேச வேண்டியது அவசியம்.

நிதிநிலைமை இன்று சிறப்பாக இருக்காது. சில சூழ்நிலைகளில் நீங்கள் பணத்தை சரியாக கையாள இயலாது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. சளி மற் றும் தொண்டைப் பிரச்சினைகளுக்கு ஆளாக நேர லாம்.




